## DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII code of Criminal Procedure)

## IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE AT TIRUVALLUR

## SESSIONS CASE NO. 163 / 2019

| | |
|---|---|
| Deposition of Witness for | Prosecution PW5<br>Defence<br>Court |

| | |
|---|---|
| Name | : Thiru. Mari |
| Father / Husband Name | : Arumugam |
| Village | : |
| Taluk | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 11th day of November, 2025.

**(Accused is present)**

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசுத் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை** :

நான் தற்போது கொசவன்பேட்டை, ஊத்துக்கோட்டை வட்டத்தில் வசித்து வருகிறேன். நான் எஸ்சி இருளர் வகுப்பு சேர்ந்தவர். ஆஜர் எதிரியை தெரியும். என்னுடன் பிறந்தவர்கள் 4 பேர். நாங்கள் வறுமையில் இருக்கும் குடும்பம் வீடு வசதியில்லை. ஆஜர் எதிரி என்னை 2016ம் வருடம் வேலைக்கு அழைத்தார். ரூபாய் 10 ஆயிரம்

முன்பணமாக கொடுத்து ரைஸ்மில்லில் மூட்டை தூக்குவது, நெல் அவிப்பது, நெல் காயவைக்கும் வேலைக்கு வரசொன்னார். என்னுடைன் என் மனைவி விஜயா வேலை செய்தார். வெளியே எங்கும் அனுப்ப மாட்டார். வெளியே செல்ல யாரையாவது ஒருவரை தான் அனுமதிப்பார். உடம்பு சரியில்லை என்றால் காசு கேட்டால் காசு கொடுக்கமாட்டார். வாரத்திற்கு ஒருமுறை 2 பேருக்கும் சேர்த்து ரூபாய் 300 தான் கொடுப்பார். அதிகமாக வேலை வாங்கி எங்களை கொடுமைபடுத்தினார். மேற்படி ரைஸ்மில் எதிரிக்கு சொந்தமானதாகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>** :

எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை.

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.

## DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII code of Criminal Procedure)

## IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE AT TIRUVALLUR

## SESSIONS CASE NO. 163 / 2019

| | |
|---|---|
| Deposition of Witness for | Prosecution PW6 |
| | Defence |
| | Court |

| | |
|---|---|
| Name | : Tmt. Vijaya |
| Father / Husband Name | : |
| Village | : |
| Taluk | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 11th day of November, 2025.

**(Accused is present)**

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசுத் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை** :

நான் தற்போது கொசவன்பேட்டை, ஊத்துக்கோட்டை வட்டத்தில் வசித்து வருகிறேன். நான் எஸ்சி இருளர் வகுப்பை சேர்ந்தவர். ஆஜர் எதிரி பிரகாஷை தெரியும். எங்களுக்கு வருமானம் குறைவு. எங்களுக்கு அட்வான்ஸாக ரூபாய் 10 ஆயிரம் கொடுத்தார்கள். ரைஸ்மில் தட்சூரில் உள்ளது. ஒருவாரத்திற்கு எனக்கும் என் கணவருக்கும் சேர்த்து

ரூபாய் 300 கொடுப்பார்கள் வாரத்திற்கு சாப்பாடு செலவிற்காக பயன்படுத்துவோம். நெல்லை தொட்டியில் ஊறபோடுவது, காலையில் காயவைப்போம் இரவு கண்விழித்திருப்போம். வெளியே எங்கும் செல்லமுடியாது. மருத்துவமனைக்கு செல்லவேண்டும் என்றாலும் ஒருவர் தான் செல்ல வேண்டும். நான் என் மூத்தார் மனோகருக்கு போன் செய்து தகவல் கூறினோம். அவர் கூறி பொன்னேரியிலிருந்து அதிகாரிகள் வந்தார்கள். எங்களை கொசவன்பேட்டையிலிருந்து கொண்டு வந்து விட்டார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>** :

எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை.

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.